THE CENTRAL LAW COLLEGE, LIBRARY, SALEM-636 008.

Register No.

FA7A

5842–23

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five – year Regular Course)

Fourth Year – Seventh Semester

BANKING LAW

Time : 2 ½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the risks in opening online accounts without proper introduction.

   உரிய அறிமுகம் இல்லாமல் துவங்கப்படும் இணையவழி கணக்குகளால் ஏற்படும் இன்னல்களை விளக்குக.

2. What is meant by Negotiable Instruments? Explain the importance of sec.138 to 142 of the Negotiable Instruments Act.

   மாற்றுமுறையாவணங்கள் என்றால் என்ன? மாற்று முறையாவண சட்டப்பிரிவு 138 முதல் 142 வரை கூறப்பட்டுள்ள முக்கியத்துவங்களை விளக்குக.

3. Explain the salient features of the Financial Institutions Act, 1983.

   நிதி நிறுவனங்கள் சட்டம், 1983-ன் முக்கியக் கூறுகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State and explain the attachment of deposits by the Income Tax Authorities.

   வருமான வரி துறை அதிகாரிகளால் வைப்பீடுகள் பற்றுகை செய்யப்படல் என்பதை பற்றிக் கூறி விளக்குக.

5. Who is a collecting banker? Discus its duties and liabilities to his customer?

   வசூலிக்கும் வங்கி என்றால் என்ன? இந்த வங்கி வாடிக்கையாளருக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் மற்றும் அதன் கடப்பாடுகளை விவாதிக்க.

6. Discuss the business permitted and prohibited for a banking company under the Banking Regulation Act, 1949.

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949-ன் படி வங்கிகள் மேற்கொள்ள வேண்டிய மற்றும் மேற்கொள்ளக் கூடாத வர்த்தகங்களைப் பற்றி விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Functions of RBI.

இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்.

(b) Restrictive Indorsement.

கட்டுப்படுத்துகின்ற மேற்குறிப்பு.

(c) Crossing of Cheques.

காசோலை கீறிலிடல்.

(d) Rules relating to lost Instrument.

காணாமல் போன ஆவணங்கள் குறித்த விதிகள்.

(e) Promissory notes.

கடனுறுதிச் சீட்டுகள்.

(f) Letter of credit.

நம்பிக்கைக் கடிதம்.

(g) Garnishee Order.

பொருள் பற்றுகை ஆணை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Kumar draws a cheque in favour of Rajan for a sum of Rs. 5,000/- in numerical and in words as Rs. Fifty thousand on 05/05/2021. Can the banker honour the cheque?

குமார் என்பவர் 05/05/2021 தேதியிட்டு ராஜன் என்பவருக்கு ஒரு காசோலையை எழுதி கொடுக்கிறார். அதில் ரூபாய் 5,000/- என எண்ணிலும், ரூபாய் ஐம்பதாயிரம் என எழுத்திலும் எழுதி கொடுக்கிறார். வங்கியர் அக்காசோலைக்கு மதிப்பளிக்கலாமா?



9. A business man approaches a bank for loan. The banker who knows his personal repaying capacity, promised to sanction the loan without surety. Is the transaction valid?

ஒரு வணிகர் கடன் ஒன்றை பெறுவதற்காக ஓர் வங்கியை அணுகுகின்றார். கடனைத் திரும்பச் செலுத்தும் அவரது சொந்த தகுதியை அறியும் வங்கியாளர், பிணையம் இல்லாமல் கடன் அளிக்க உறுதியுரை அளிக்கிறார். இந்நடைமுறை செல்லுபடியாகுமா?

10. 'A' is a customer of bank 'B', 'A' draws a bearer cheque and kept it inside a drawer. 'A' came to know that it was missing and immediately informed to the banker by phone to 'stop payment' to the particular cheque. 'C' the holder of the cheque received money from the bank at the counter. 'A' filed a suit against the bank. Can he succeed?

'ஆ' வங்கியில், 'அ' என்பவர் வாடிக்கையாளர். அவர் ஒரு காசோலை வரைந்து டிராயரில் வைத்திருந்தார். அக்காசோலை தொலைந்தது தெரிந்த உடனே, அவர் தொலைபேசி மூலம் வங்கியினை தொடர்பு கொண்டு காசோலைக்குப் பணம் வழங்கக்கூடாது என்று தெரிவித்தார். 'இ' என்பவர், காசோலையின் உரிமையர் என்ற முறையில் பணம் பெற்றுச் சென்றுவிட்டார். வங்கியின் மீது 'அ' என்பவர் வழக்கு தொடருகிறார். அவர் வெற்றி பெறுவாரா?